(45)

உறுப்பினர் செயலர் (பொறுப்பு) , திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்
திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண்.1160/2015 (2) தி.உ.தி.கு. நாள். 21.01.2020

பொருள்: திட்ட அனுமதி - திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமம் - திருநெல்வேலி மாநகராட்சி - திருநெல்வேலி மண்டலம், வார்டு-T, பிளாக்-5, நகரளவை எண்.310/3 (சுத்தமல்லி கிராமம் - சர்வே எண். 772/3)-ல் 5700 ச.மீ பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 49–ன் கீழ் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது– தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திருநெல்வேலி விண்ணப்பம் நாள்.18.9.15 மற்றும் 12.12.2019
2. ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண். ஜிபி1/9957 /17, நாள்.14.11.17
3. திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம் தீர்மானம் எண்.06, நாள்.10.01.2018
4. ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களுக்கு முகவரியிட்ட இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1160/2015 திஉதிகு நாள்.14.02.2018
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.14143/2018/எல்ஏ1 நாள்.13.12.2018.
6. அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கடித எண்.19113/நவ4(3)/2017 நாள்.30.08.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/எல்எ1 நாள்.08.09.2017.
8. செயற்பொறியாளர், (தி) திருநெல்வேலி மாநகராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.ஜிபி1/9957/17 நாள்.03.10.2019

**ஆணை:**

திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம், திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு-T, பிளாக்-5, நகரளவை எண்.310/3 (சுத்தமல்லி கிராமம் - சர்வே எண். 772/3)-ல் 5700 ச.மீ குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ***ம.வ/தி.உ.தி.கு.எண்.2/2020*** என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு **1971-ம்** ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு **49-ன்** கீழ், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடங்களுக்கு ***தி.அ/ம.வ/தி.உ.தி.கு. எண். 2/2020*** என்று எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

உத்தேச உபயோகம் -குடியிருப்பு மனைப்பிரிவு

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.''

2. பார்வை 6-இல் கண்ட அரசு கடிதத்தின் படி ''உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். ''

<u>நிபந்தனைகள்:</u>

1. இம்மனைப்பிரிவுக்கு விரிவு அபிவிருத்தி திட்ட விதிகள் மற்றும் கட்டிட விதிகள் அனைத்தும் பொருந்தும்.

2. மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களிடம் தனியாக உரிமம் பெறப்பட வேண்டும்.

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated:22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite person to purchase in any manner any plot, apartment or building as the case may be in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority."

4. Tamilnadu Combined Development and Building Rules 2019 விதி 11-இன் படி

The Permission granted by the competent authority shall not mean responsibility or clearance of the following aspects,

1. Title or ownership of the site or building
2. Easement Rights

உறுப்பினர் செயலர் (பொறுப்பு),
திருநெல்வேலி உள்ளூர் திட்டக் குழுமம்,
திருநெல்வேலி.

பெறுநர்: ஆணையர்,
திருநெல்வேலி மாநகராட்சி

நகல்:

1. வைப்பறை (உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன்)
2. செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருநெல்வேலி வீட்டு வசதி பிரிவு E.B காலனி, திருநெல்வேலி -627 011 — உத்தரவு கடிதம் மட்டும்

001351

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,

# 493, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை - 600 035.

☎ 044 - 24352291; email: tnhbcomputer@yahoo.com www.tnhb.org/test/

குறிப்பாணை எண்.திட்டப்பிரிவு/24454/2015 நாள். 09/05/2018.

பொருள்:- தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் – திட்டப் பிரிவு – மதுரை சரகம் – திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி கிராமத்தில் பகுதி–II புல எண்.772/3ல் 1.40 ஏக்கர் நிலத்தில் 22 மத்திய வருவாய் பிரிவு வீட்டு மனைகள் மற்றும் 1 கடைக்கான மனை மேம்பாட்டு திட்டம் ரூபாய்.90.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் (நிலத்தின் விலை உட்பட) செயலாக்குவதற்கு வாரிய நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது – வாரிய கூட்ட தீர்மானத்தின் நகல் அனுப்புதல் –தொடர்பாக.

பார்வை: 1) மேற்பார்வை பொறியாளர் / மதுரை சரகம் கடித எண். MC/Plg/1577/2015 நாள் 30/01/2018.

2) செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்/ திருநெல்வேலி வீட்டு வசதி பிரிவு கடித எண். Plg/4399/2014 நாள் : 25/01/2018.

3) வாரியக் கூட்டத் தீர்மானம் எண். 4.02 நாள் 30/04/2018.

*****

பார்வையில் கண்டுள்ள பொருள் குறித்து மேற்பார்வை பொறியாளர், மதுரை சரகம் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 3ல் கண்ட வாரிய தீர்மானத்தில் (தீர்மானம் எண்.4.02 நாள் 30/04/2018) இத்திட்டத்தை செயல்படுத்த வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் நகல் வாரியக் கூட்ட குறிப்புடன் சேர்த்து (இணைப்புகளுடன்) மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கூறிய திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட (D.T.P Approved layout) திட்ட மனை வரைபடத்தின் மூன்று நகல்கள் மற்றும் உள்ளாட்சி மன்றத்தின் தடையின்மை சான்றிதழை உரிய காலத்தில் பெற்று காலம் தாழ்த்தாமல் உடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்கள் பெற்ற பின்புதான், அரசுக்கு திட்ட ஒப்புதல் பெறும் பொருட்டு அனுப்பிவைக்க இயலும் என்பதால் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்குறிப்பாணை மற்றும் அதன் இணைப்புடன் பெற்றுக் கொண்டமைக்கு, ஒப்புகையை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/- இரா.சரவணன்
தலைமை பொறியாளர்(பு நநகர்)
தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

இணைப்பு :-
வாரியக் கூட்ட தீர்மான எண். 4.02 நாள். 30/04/2018.

பெறுநர் :-
மேற்பார்வை பொறியாளர்,
மதுரை சரகம் ,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
மதுரை.

நகல் : -

1) செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்,
திருநெல்வேலி வீட்டு வசதி பிரிவு,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
காமராஜா சாலை, அன்பு நகர்,
ஈ.பி.காலனி, திருநெல்வேலி –627011.

2) செயற்பொறியாளர்/ தொழில் நுட்ப பிரிவு (T. Cell),
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை–35.

3) உதவி செயலாளர்/ ஒதுக்கீடு பிரிவு (பு ந)
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை–35.

4) செயற்பொறியாளர்/ கண்காணிப்பு பிரிவு (M. Cell),
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை–35

/உத்தரவின்படி அனுப்பப்படுகிறது/

G. Premalatha 10/5/2018
உதவி செயற்பொறியாளர்
திட்டப்பிரிவு

10/5/18